**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி**

முன்னிலை : திருமதி.G.ஆனந்தி, எம்.ஏ., எம்.எல்.,
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, பொள்ளாச்சி.

2021ம் வருடம் டிசம்பர் திங்கள் 09ம் நாள் வியாழக்கிழமை

**அ.வ.எண்.294/2020 இல் இ.ம.எண்.1/2020**

T.சரவணப்பிரகாஷ் ... மனுதாரர் / வாதி

/ எதிர் /

லிடியா பிரமிளா வின்சி ... எதிர்மனுதாரர்/ 4ம் பிரதிவாதி

இம்மனுவானது கடந்த 16.11.2021 தேதியன்று இறுதி விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு மனுதாரர் / வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.D.நந்தகோபாலகார்த்திகேயன் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர் / 4ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.P.Ra.அய்யப்பன் அவர்கள் முன்னிலையாகியும், மனுதாரர் / வாதி மற்றும் எதிர்மனுதாரர் / 4ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர்களின் வாதுரைகளைக் கேட்டும், இதுநாள் வரையில் எனது கவனமான பரிசீலனையில் இருந்து வரும் வழக்காவணங்களை பரிசீலித்தும் இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்...

## ஆணையுரை

தாவா 3வது அயிட்ட ஒற்றைக்கல் அரணி வாய்க்காலை அமைதியான முறையில் மனுதாரர் / வாதி உபயோகித்து அவரது 1வது அயிட்ட பூமிகளுக்கு பாசனம் செய்து வருவதை 4ம் பிரதிவாதியோ அவரது ஆட்கள் வகையறா பேர்களோ எவ்வித இடைஞ்சலும் ஏற்படுத்தக்கூடாது என இடைக்கால உறுத்துக்கட்டளை உத்தரவும், அசல் வழக்கு முடியும் வரை இடைக்கால உறுத்துக்கட்டளை உத்தரவும் பிறப்பிக்கக்கோரி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 39 விதி 1 மற்றும் 2-ன் கீழ் இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்:**

மனுதாரர் அசல் வழக்கில் வாதி. தாவா 1வது அயிட்ட சொத்துக்கள் மனுதாரர் / வாதியின் தகப்பனாரான தங்கவேல் என்பவருக்கு 16.09.1964ம் தேதியிட்ட கிரைய பத்திரத்தின் மூலம் சண்முக கவுண்டர் என்பவரால் கிரையம் செய்து கொடுக்கப்பட்டு அவரது தனிப்பட்ட சுவாதீன அனுபவத்தில் வைத்து அனுபவம் செய்து வந்தார். மனுதாரர் / வாதியின் தந்தை மேற்படி சொத்துக்களை கிரையம் பெற்ற கிரைய பத்திரத்தில் "இதில் கண்ட க.ச.501B நெ. காலை வழியாக நீங்கள் தெற்கே இருந்து அரணி பிடித்து PAP வாய்க்கால் தண்ணீரை வடக்கே உள்ள உங்கள் பூமிகளுக்கு தண்ணீர் பாய்த்துக்கொள்ள வேண்டியது" என்று மனுதாரர் / வாதியின் பூமிகளுக்கு பாசனம் செய்து கொள்ள மேற்படி சண்முக கவுண்டர் பாத்தியம் கொடுத்து கிரையம் ஆவணம் எழுதப்பட்டுள்ளது. மேற்படி கிரைய பத்திரத்தில் கண்ட வாய்க்கால் பாத்திய உரிமைப்படி PAP தண்ணீரை மனுதாரர் / வாதியின் தந்தை கெடு நாட்களில் அரணி பிடித்து பாசனம் செய்து விவசாயம் செய்து வந்தார். தாவா 2வது அயிட்ட சொத்தான க.ச.501B நெ காலை பூமியானது சண்முககவுண்டருக்கு பாத்தியப்பட்டிருந்து அவர் அதனை 1ம் பிரதிவாதியின் தாய் வழிப் பாட்டியான ராமலட்சுமி அம்மாள் என்பவருக்கு 16.09.1964ம் தேதியிட்ட கிரைய பத்திரத்தின் படி பாத்தியப்படுத்திக் கொடுத்துள்ளார். மேற்படி ராமலஷ்மி அம்மாள் அவர்களுக்கு கிரையம் கொடுத்த கிரைய ஆவணத்திலும், " நாளது தேதியில் நான் கிரையம் செய்யும் மைனர் தங்கவேல் கார்டியன் தகப்பன் பழனியப்பகவுண்டருக்கு நீங்கள் தெற்கே இருந்து வடக்கே அரணி பிடித்து PAP வாய்க்கால் தண்ணீர் கொண்டு செல்ல விட்டுவிட வேண்டியது என நிபந்தனை சரத்து கண்டு கிரையம் கொடுத்துள்ளார். மேற்படி அரணி தாவா 3வது அயிட்டமாக விவரிக்கப்பட்டுள்ளது. பரம்பிக்குளம் ஆழியார் பாசன திட்டத்தில் உள்ள பாசன ஆயக்கட்டுக்குள் உள்ள பூமிகளில் உள்ள மண் அரணியின் மூலம் தண்ணீர்

கொண்டு சென்று பாசனம் செய்கையில் ஏற்படும் நீர் இழப்பினை தவிர்க்கும் பொருட்டு தமிழ்நாடு அரசு வேளாண்மை பொறியியல் துறையினரால் காடா திட்டத்தின் மூலம் மண் அரணிகளை மேம்படுத்தி ஒற்றைக்கல் அரணி வாய்க்கால் அமைத்து கொடுக்கப்பட்டுள்ளது. க.ச.501B நெ. காலை பூமியின் வழியாக தெற்கே இருந்து வடக்கே தாவா 1வது அயிட்ட பூமி வரையில் ராமலஷ்மி அம்மாள் அவர்களின் பூமியில் ஒற்றைக்கல் வாய்க்கால் கட்டி அதன் மூலம் வேட்டைக்காரன்புதுார் கால்வாய் பெரியபோது பகிர்வு வாய்க்கால் கிளை வாய்க்கால் எண்.1ன் 8வது வலது மதகில் நேர்கண் மடை மூலம் வரும் PAP வாய்க்கால் தண்ணீரை யாருடைய ஆட்சேபணையும், இடையூறும் இன்றி பாய்த்து விவசாயம் செய்து வந்துள்ளார். தாவா 1வது அயிட்ட சொத்துக்களை மனுதாரர் / வாதியின் தந்தை மனுதாரர் / வாதிக்கு 25.06.2013ம் தேதியிட்ட செட்டில்மெண்ட் பத்திரத்தின் மூலம் பாத்தியப்படுத்திக் கொடுத்துள்ளார். அன்றைய நாள் முதல் மனுதாரர் / வாதி தாவா 1வது அயிட்ட பூமிகளுக்கு தாவா 3வது அயிட்ட அரணி வாய்க்காலின் மூலம் தாவா 2வது அயிட்ட பூமிகளின் வழியாக யாருடைய இடையூறும், ஆட்சேபணையும் இன்றி தொடர்ந்து பயன்படுத்தி விவசாயம் செய்து வருகிறார். ராமலட்சுமி அம்மாள் அவர்கள் க.ச.501/B2 நெ காலையில் 1.00 ஏக்கர் சொத்துக்களை பொறுத்து எந்த ஏற்பாடும் செய்யாமல் அவரது மகள் மாணிக்கத்தாய் என்கிற முருகானந்ததாய் என்பவரை வாரிசாக விட்டுவிட்டு இறந்துவிட்டார். மேற்படி மாணிக்கத்தாய் என்கிற முருகானந்ததாய் மேற்படி சொத்துக்களை பொறுத்து எவ்வித ஏற்பாடும் செய்யாமல் அவரது மகனான அமர்பழனிச்சாமியையும், மகளான 1ம் பிரதிவாதியையும் வாரிசுகளாக விட்டுவிட்டு இறந்துவிட்டார். 1ம் பிரதிவாதி தாவா 2வது அயிட்ட சொத்துக்களை 01.08.2018ம் தேதியிட்ட செட்டில்மெண்ட் பத்திரத்தின் மூலம் 2ம் பிரதிவாதியான ஐஸ்வர்யா வேங்கடராமலட்சுமி என்பவருக்கு பாத்தியப்படுத்திக் கொடுத்துள்ளார். 2ம்பிரதிவாதி மேற்படி தாவா

2வது அயிட்ட சொத்துக்களை அவரது தந்தையான 3ம் பிரதிவாதிக்கு பாத்தியப்படுத்திக் கொடுத்துள்ளார். 3ம் பிரதிவாதி தாவா 2ம் அயிட்ட சொத்துக்களை 02.11.2018ம் தேதியிட்ட கிரைய பத்திரத்தின் மூலம் 4ம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்துள்ளார். மேற்படி 2வது அயிட்ட சொத்துக்களின் மற்றொரு பாகஸ்தரான 1ம் பிரதிவாதியின் சகோதரர் அமர்பழனிச்சாமி 5 மற்றும் 6ம் பிரதிவாதிகளை வாரிசாக விட்டுவிட்டு இறந்துவிட்டதால் அவர்கள் அவசிய தரப்பினர்களாக கட்சி சேர்க்கப்பட்டுள்ளனர். 4ம் பிரதிவாதி தாவா 2ம் அயிட்ட சொத்துக்களை கிரையம் பெற்றவுடன் அவரது பூமியின் வழியாக வரும் ஒற்றைக்கல் அரணி வாய்க்காலின் பெரும் பகுதியை இயந்திரம் மூலம் இடித்து அப்புறப்படுத்தியுள்ளார். தாவா 3வது அயிட்ட சொத்துக்களில் மனுதாரர் / வாதிக்கு உண்டான தண்ணீர் பாய்த்துக் கொள்ளும் உரிமையை எடுத்துக்கூறியும் மறுத்துவிட்டதால் வேட்டைக்காரன்புதூர், கால்வாய் பிரிவு எண்.1–க்கான பொதுப்பணித்துறை உதவிப்பொறியாளர் அவர்களிடம் 29.05.2020ம் தேதியில் தள ஆய்வு செய்து ஒற்றைக்கல் வாய்க்கால் அரணி குறித்த வரைபடம் வழங்குமாறு மனுதாரர் / வாதி புகார் அளித்துள்ளார். மேலும், அன்றைய தினமே பரம்பிக்குளம் ஆழியார் பாசன திட்ட நீரினை பயன்படுத்துவோர் சங்கத்தின் தலைவரான 7ம் பிரதிவாதியிடமும் புகார் அளித்துள்ளார். மேற்படி உதவிப்பொறியாளர் மற்றும் பாசன சங்க தலைவர் ஆகியோர்கள் தள ஆய்வு மேற்கொண்டு பொதுப்பணித்துறை அலுவலக ஆவணங்களின் அடிப்படையில் மனுதாரர் / வாதிக்கு வாய்க்கால் பாத்தியத்தை உறுதிப்படுத்தி வரைபடம் வழங்கியுள்ளனர். 25.09.2020ம் தேதியில் 4ம் பிரதிவாதி மேற்படி 3வது அயிட்ட தாவா அரணி வாய்க்காலை மனுதாரர் / வாதி உபயோகித்து அவரது பூமிகளுக்கு தண்ணீர் பாசனம் செய்து வந்ததை ஆட்சேபித்துள்ளார், அவ்வாறு ஆட்சேபிக்கவோ, தடை செய்யவோ எதிர்மனுதாரர் / 4ம் பிரதிவாதிக்கு எவ்வித உரிமையும் இல்லை. தாவா 3வது அயிட்ட

ஒற்றைக்கல் அரணி வாய்க்காலை செப்பனிட்டு மீண்டும் கல் வாய்க்காலாக கட்டாவிட்டால் மேற்படி பி.ஏ.பி வாய்க்கால் தண்ணீர் முழுமையாக பாய்ந்து விவசாயம் செய்ய முடியாமல் தண்ணீர் முழுவதும் வீணாகிவிடும். 4ம் பிரதிவாதி மீண்டும் அவரது ஆட்கள் மூலம் தாவா 3வது அயிட்ட அரணி வாய்க்காலை அழித்து அடைத்து விட முயற்சி செய்து வருகிறார். அவ்வாறு தாவா வாய்க்காலை 4ம் பிரதிவாதி அழிமாட்டம் செய்தால் மனுதாரர் / வாதியின் பூமிகளுக்கு பி.ஏ.பி வாய்க்கால் தண்ணீர் மூலம் பாசனம் செய்ய முடியால் பெரும் இழப்பு ஏற்படும். எனவே, மனுதாரர் / வாதி தாவா 3 வது அயிட்ட ஒற்றைக்கல் அரணி வாய்க்காலை அமைதியான முறையில் உபயோகித்து 1வது அயிட்ட பூமிகளுக்கு பாசனம் செய்து வருவதை எதிர்மனுதாரர் / 4ம் பிரதிவாதியோ, அவரது ஆட்கள் வகையறாக்களோ எவ்வித இடைஞ்சலும் ஏற்படுத்தக்கூடாது என இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரமும், அசல் வழக்கு முடிவிற்கு வரும் வரை தற்காலிக உறுத்துக்கட்டளை பரிகாரமும் பிறப்பிக்கக் கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

3) **எதிர்மனுதாரர் / 4ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்** :

மனுதாரர் / வாதியின் மனு பொய்யும், மோசடியானது என்பதால் சட்டப்படியும் நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல. எதிர்மனுதாரர் / 4ம் பிரதிவாதி வெளிப்படையாக ஒப்புக்கொள்ளும் சங்கதிகளைத் தவிர மனுவில் கண்டுள்ள மற்ற சங்கதிகளை மனுதாரர் / வாதியே நிரூபிக்க வேண்டும். எதிர்மனுதாரர் / 4ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டு அனுபவம் செய்து வரும் தாவா 2வது அயிட்ட சொத்தில் தாவா 3வது அயிட்ட சொத்தாக கூறப்படும் ஒற்றைகல் அரணி வாய்க்கால் எதுவும் அமைந்திருக்கவில்லை. அதுபோல் தாவா 1ம் அயிட்ட சொத்துக்கு P.A.P. தண்ணீர் எதுவும் கொண்டு செல்லப்படவில்லை என்பதால், இம்மனுவானது சட்டப்படி செல்லத்தக்கதல்ல. தாவா 1வது அயிட்ட சொத்துக்கு

மனுதாரர் / வாதியின் தந்தை பூமியை அனுபவித்து வந்த காலத்தில் பரம்பிக்குளம் ஆழியாறு பாசன திட்டத்திலுள்ள பாசன ஆயக்கட்டுக்குள் உள்ள பூமிகளில் உள்ள மண் அரணியின் மூலம் தண்ணீர் கொண்டு சென்று பாசனம் செய்கையில் ஏற்படும் நீர் இழப்பினை தவிர்க்கும் பொருட்டு தமிழ்நாடு அரசு வேளாண்மை பொறியியல் துறையின் மூலம் காடா திட்டத்தின் மூலம் அரணிகளை மேம்படுத்தி ஒற்றைக்கல் அரணி வாய்க்கால் அமைத்து கொடுத்துள்ளதாக கூறியுள்ளது பொய்யாகும். காடா திட்டத்தின் மூலம் ஒற்றைக்கல் அரணி வாய்க்கால் அமைக்கப்படவில்லை. மனு 6 முதல் 9 வரையிலான பாராக்களில் கூறியுள்ள சங்கதிகளை மனுதாரர் / வாதியே நிரூபிக்க வேண்டும். மனுதாரர் / வாதி குறிப்பிடும் சம்பவங்கள் உண்மையாக இருந்திருக்கும் பட்சத்தில் வருவாய்துறை அல்லது காவல் துறையிடம் புகார் அளிக்காமல் 7ம் பிரதிவாதியான பாசனசபை தலைவரிடம் முறையீடு செய்தார் என்று குறிப்பிட்டுள்ளதிலிருந்தே மனுதாரர் / வாதியும், 7ம் பிரதிவாதியும் கூட்டாக சேர்ந்து பொய்யான சங்கதிகளின் அடிப்படையில் தாவா வழக்கினை தாக்கல் செய்துள்ளனர் என்பது தெரிய வருகிறது. மேலும், Tamilnadu Irrigation Works (Construction of field bothies) Act 1959ன் பிரிவு 3ன் படி If the Collector is satisfied that it is necessary expedient that any owner should construct or dig field bothies in his land in the ayacut of an irrigation work, he shall by notice require the owner to construct or dig field bothies in that land within such time as may be specified in the notice and in such manner as may be prescribed. அரணி வாய்க்கால் சட்டம் பிரிவு 7(1), (2)ன் படி 1) No person shall, except in accordance with such rules as may be prescribed, do anything which obstructs or interferes or is likely to obstruct or interfere with the flow of water in any field bothies.

2) If any person contravenes the provisions of sub-section(1), he shall be punishable with imprisonment which may extend to six months or with fine which may extend to one

thousand rupees or with both. மனுதாரர் / வாதியும், 7 ம் பிரதிவாதியும் கூட்டு சேர்ந்து பொய்யான தகவல்களை பொதுபணித்துறை உதவி பொறியாளர் அவர்களிடம் அளித்து சட்டத்திற்கு புறம்பாக வருவாய் துறை அதிகாரிகள் இல்லாமல் தாவா 2 வது அயிட்ட சொத்தை தல ஆய்வு மேற்கொண்டு அறிக்கை பெற்று தாக்கல் செய்துள்ளார்கள். 7 ம் பிரதிவாதி Letter pad சங்கம் ஒன்றை ஏற்படுத்திக் கொண்டு சுயலாபத்திற்காக வருவாய்துறை மற்றும் பொதுபணித்துறையினரை நிர்பந்தப்படுத்தி பலனடைந்து வருகிறார். பொதுப்பணித்துறை உதவி பொறியாளர் அவர்களின் தள ஆய்வு அறிக்கையில் 501/B1 காலைக்கு நீர் பாசனம் செய்ய 501/B2A1 காலை வழியாக தென்வடலாக கொண்டு சென்றால் மட்டுமே நீர் பாசனம் செய்ய சாத்திய கூறுகள் உள்ளது என்பது தொழில்நுட்ப ரீதியாக தெரிய வருகிறது என தெரிவித்துள்ளதன் மூலம் மனு 1–வது அயிட்ட சொத்துக்களுக்கு தாவா 2 வது அயிட்ட சொத்துக்களில் அமைந்துள்ள தாவா 3 வது அயிட்ட அரணி வாய்க்கால் மூலம் PAP வாய்க்கால் தண்ணீர் பாய்ந்து வந்தது என்பது பொய் என்று நிரூபணம் ஆகிறது. மனுதாரர் / வாதி குறிப்பிடுவது போல் காடா திட்டத்தின் மூலம் அமைக்கப்பட்டதாக கூறப்படும் ஒற்றைக்கல் அரணி வாய்க்காலை எதிர்மனுதாரர் / 4 ம் பிரதிவாதி இடித்து சேதப்படுத்தவில்லை. எதிர்மனுதாரர் / 4 ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட தாவா 2 வது அயிட்ட சொத்தில் தாவா 3 வது அயிட்ட ஒற்றைக்கல் அரணி வாய்க்கால் அமைக்கப்பட்டிருப்பின் அதற்கான பதிவேடுகள் பொது பணித்துறை மற்றும் வருவாய்துறையில் பதிவு செய்யப்பட்டிருக்கும். காடா திட்டம் கடந்த 1974 ம் வருடம் மத்திய அரசின் 5 ஆண்டு திட்டத்தின் மூலம் அமுல்படுத்தப்பட்ட திட்டமாகும். மேற்படி திட்டத்தின் மூலம் அமைக்கப்பட்ட ஒற்றைக்கல் அரணி வாய்க்கால்களை தமிழ்நாடு பாசன வேலைகள் மற்றும் கட்டுமானங்கள் (புலங்கள்) சட்டம் 1959 அரணி வாய்க்கால் சட்டம் 1959 சட்டப்பிரிவுகளின் படி மாவட்ட ஆட்சியர் பொறுப்பில் வருவாய்துறை பராமரிப்பு செய்து வருகிறது.

மனுதாரர் / வாதி, 7ம் பிரதிவாதியுடன் கூட்டுச் சேர்ந்து கொண்டு பொதுப்பணித்துறை உதவி பொறியாளரிடமிருந்து ஒரு தவறான அறிக்கையை பெற்று தாவா ஆவணமாகக் கொண்டு தாக்கல் செய்துள்ள இம்மனுவில் எவ்வித முகாந்திரமும் இல்லை. மனுதாரர் / வாதி கோரியுள்ள பரிகாரமானது மனுதாரர் / வாதிக்கு கிடைக்கத்தக்கதல்ல என்பதால், இம்மனுவினை தள்ளுபடி செய்யவேண்டுமென்று கூறப்பட்டுள்ளது.

4)இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை யாதெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

5)இரு தரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

6) தாவா 3வது அயிட்ட ஒற்றைக்கல் அரணி வாய்க்காலை அமைதியான முறையில் மனுதாரர் / வாதி உபயோகித்து அவரது 1வது அயிட்ட பூமிகளுக்கு பாசனம் செய்து வருவதை 4ம் பிரதிவாதியோ அவரது ஆட்கள் வகையறா பேர்களோ எவ்வித இடைஞ்சலும் ஏற்படுத்தக்கூடாது என இடைக்கால உறுத்துக்கட்டளை உத்தரவும், அசல் வழக்கு முடியும் வரை இடைக்கால உறுத்துக்கட்டளை உத்தரவும் பிறப்பிக்கக்கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் / வாதி, எதிர்மனுதாரர் / 4ம் பிரதிவாதி தரப்பில், சாட்சிகள் முன்னிலைப்படுத்தப்படவில்லை. மனுதாரர் / வாதி தரப்பில் **ம.சா.ஆ.1** முதல் **ம.சா.ஆ.18** வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் / 4ம் பிரதிவாதி தரப்பில் **எ.ம.சா.ஆ.1** முதல் **எ.ம.சா.ஆ.5** வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. இ.ம.எண்.02/2020 மனுவில் நீதிமன்ற ஆணையரால் தாக்கல் செய்துள்ள நீதிமன்ற ஆணையர் அறிக்கை **நீ.ம.சா.ஆ.1** மற்றும் வரைபடம் **நீ.ம.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. கற்றறிந்த இருதரப்பு வழக்கறிஞர்களின் வாதுரை கேட்கப்பட்டது.

7) மனுதாரர் / வாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் அசல் வழக்கானது விளம்புகை பரிகாரம் கோரியும், நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரியும், செயலுறுத்துக் கட்டளை பரிகாரம் கோரியும் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், தாவா 1வது அயிட்ட சொத்து மனுதாரர் / வாதிக்கு பாத்தியப்பட்டது என்றும், தாவா 2வது அயிட்ட சொத்து எதிர்மனுதாரர் / 4ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றும், தாவா 3வது அயிட்ட சொத்து பி.ஏ.பி. ஒற்றைக்கல் அரணி வாய்க்கால் என்றும், தாவா 1வது அயிட்ட சொத்தினை ம.சா.ஆ.1 16.09.1964ம் தேதியிட்ட கிரைய ஆவணத்தின் படி மனுதாரர் / வாதியின் தகப்பனாரான தங்கவேல் என்பவர் சண்முக கவுண்டரிடமிருந்து கிரையம் பெற்றுள்ளதாகவும், மேற்படி 1வது அயிட்ட சொத்தினை கிரையம் பெற்றுள்ள கிரைய ஆவணத்தில் பரம்பிக்குளம் ஆழியார் திட்ட கால்வாய் மூலம் வரும் தண்ணீரை க.ச.501B நெ காலை வழியாக அரணி வாய்க்கால் பிடித்து அவரது பூமிகளுக்கு பாசனம் செய்து கொள்ள கிரையம் கொடுத்த சண்முக கவுண்டர் பாத்தியம் வழங்கியுள்ளதாகவும், மேற்படி விபரங்கள் ம.சா.ஆ.1 கிரைய ஆவணத்தில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ள நிலையில் மேற்படி பி.ஏ.பி வாய்க்காலில் இருந்து மனுதாரர் / வாதியின் தந்தையான தங்கவேலு பி.ஏ.பி தண்ணீரை அவரது கெடு நாட்களில் அரணி பிடித்து பாய்த்து தாவா 1வது அயிட்ட சொத்தில் விவசாயம் செய்து வந்த நிலையில், ம.சா.ஆ.4 தான செட்டில்மெண்ட் ஆவணத்தின் மூலமாக மனுதாரர் / வாதிக்கு பாத்தியப்படுத்திக் கொடுத்து மனுதாரர் / வாதியின் தகப்பனார் அனுபவித்து வந்தது போலே 1வது அயிட்ட சொத்தினை மனுதாரர் / வாதி பி.ஏ.பி வாய்க்காலில் இருந்து தண்ணீர் பாசனம் செய்து அனுபவித்து வருவதாகவும், தாவா 2வது அயிட்ட சொத்து மனுதாரர் / வாதியின் முன்கிரையதாரரான சண்முக கவுண்டர் என்பவரால் பிரதிவாதியின் தாய்வழி பாட்டியான ராமலட்சுமி அம்மாள் என்பவருக்கு மனுதாரர் / வாதியின் தந்தையான தங்கவேலு கிரையம் பெற்ற அதே நாளிலேயே கிரையம் செய்து கொடுக்கப்பட்டுள்ளதாகவும், மேற்படி

கிரைய ஆவணத்தில் நாளது தேதியில் நான் கிரையம் செய்யும் மைனர் தங்கவேல் கார்டியன் தகப்பன் பழனியப்பகவுண்டருக்கு நீங்கள் தெற்கே இருந்து வடக்கே அரணி பிடித்து பி.ஏ.பி வாய்க்கால் தண்ணீர் கொண்டு செல்ல விட்டுவிட வேண்டியது என்று நிபந்தனை சரத்து குறிப்பிட்டு கிரையம் கொடுத்துள்ளதாகவும், அதன் அடிப்படையில் க.ச.501B நெ. காலை பூமிகள் செட்டில்மெண்ட் அலுவலரால் கூட்டு பட்டாவாக உத்தரவிடப்பட்டு 14.12.1970 ம் தேதியில் மேற்படி சண்முக கவுண்டர் மனுதாரர் / வாதியின் தந்தை மற்றும் ராமலட்சுமி அம்மாள் ஆகியோர்களின் பெயரில் கூட்டு பட்டா வழங்கப்பட்டு வரி செலுத்தப்பட்டு வரப்படுவதாகவும், தாவா 3 வது அயிட்ட ஒற்றைக்கல் அரணி வாய்க்கால் வழியாக தாவா 1 வது அயிட்ட சொத்திற்கு தாவா 2 வது அயிட்ட சொத்தின் வழியாக தண்ணீர் பாய்ச்சும் வசதி உள்ளது என்பது ம.சா.ஆ.1 மற்றும் ம.சா.ஆ.2 கிரைய ஆவணங்களில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ள நிலையில், ராமலட்சுமி அம்மாள் அவர்கள் சண்முக கவுண்டரிடமிருந்து பெற்ற சொத்தினைப் பொறுத்து எவ்வித ஏற்பாடும் செய்து வைக்காமல் அவரது மகளான மாணிக்கத்தாய் என்கிற முருகானந்ததாய் என்பவரை வாரிசாக விட்டுவிட்டு இறந்து விட்டதாகவும், மேற்படி மாணிக்கத்தாய் என்கிற முருகானந்ததாயும் அவருடைய மகனான அமர்பழனிச்சாமியையும் மகளான 1 ம் பிரதிவாதியையும் வாரிசாக விட்டுவிட்டு இறந்து விட்ட நிலையில், மேற்படி 2 வது அயிட்ட சொத்தின் ஒரு பாகஸ்தரான 1 ம் பிரதிவாதி அவருக்கு பாத்தியப்பட்ட சொத்தினை 2 ம் பிரதிவாதிக்கு பாத்தியப்படுத்திக் கொடுத்துள்ளதாகவும், 2 ம் பிரதிவாதி அதனைப் பொறுத்து 3 ம் பிரதிவாதிக்கு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிக் கொடுத்துள்ள நிலையில், மேற்படி 3 ம் பிரதிவாதி எதிர்மனுதாரர் / 4 ம் பிரதிவாதிக்கு தாவா 2 வது அயிட்ட சொத்தினை கிரையம் செய்து கொடுத்துள்ளதாகவும், எதிர்மனுதாரர் / 4 ம் பிரதிவாதி தாவா 2 வது அயிட்ட சொத்தினை கிரையம் பெற்ற பிறகு 2020 ம் ஆண்டு மார்ச்

மாதத்தில் தாவா 3 வது அயிட்ட சொத்தான ஒற்றைக்கல் அரணி வாய்க்காலின் பெரும் பகுதியை இயந்திரம் மூலம் இடித்து அப்புறப்படுத்தியுள்ளதாகவும், மனுதாரர் / வாதி பூமிக்கு பி.ஏ.பி. தண்ணீரை தன் பூமி வழியாக பாய்ச்ச விடமாட்டேன் என்று அதிகாரமாக பேசி பசாரித்துள்ளார் என்றும், இதுசம்மந்தமாக மனுதாரர் / வாதி பொதுப்பணித்துறை உதவிப்பொறியாளரிடமும், பரம்பிக்குளம் ஆழியார் பாசன திட்ட நீரினை பயன்படுத்துவோர் சங்கத்தின் தலைவரான 7 ம் பிரதிவாதியிடமும் புகார் அளித்துள்ளதாகவும், ம.சா.ஆ.1, ம.சா.ஆ.2 கிரைய ஆவணங்களின் மூலம் தாவா 3 வது அயிட்ட அரணி வாய்க்கால் மூலம் தாவா 2 வது அயிட்ட சொத்தின் வழியாக தாவா 1 வது அயிட்ட சொத்திற்கு தண்ணீர் பாய்ச்சும் வசதி மனுதாரர் / வாதிக்கு உள்ளது என்பதால், அதனை தடுக்க எதிர்மனுதாரர் / 4 ம் பிரதிவாதிக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றும், மேற்படி வாய்க்கால் மூலம் பாயும் தண்ணீர் தான் மனுதாரர் / வாதியின் பூமிக்கு முக்கியமான நீர் ஆதாரம் என்ற நிலையில், மேற்படி அரணி வாய்க்கால் தண்ணீரை கிணர்களில் சேமித்து வைத்து அந்த நீரை சொட்டு நீர் பாசனம் மூலம் பாய்த்து மனுதாரர் / வாதி விவசாயம் செய்து வரும் நிலையில், தாவா 3 வது அயிட்ட சொத்தான அரணி வாய்க்காலை எதிர்மனுதாரர் / 4 ம் பிரதிவாதி முழுவதுமாக அழிக்க ஆயத்தமாக உள்ளார் என்றும், அவ்வாறு செய்தால் மனுதாரர் / வாதிக்கு மிகுந்த பாதிப்பு ஏற்படும் என்பதால், மனுதாரர் / வாதி தாவா 3 வது அயிட்ட சொத்தினைப் பொறுத்து விளம்புகை பரிகாரம் கோரியும், நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும், செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி அசல் வழக்கினை தாக்கல் செய்துள்ளதாகவும், மனுதாரர் / வாதி தாவா 3 வது அயிட்ட ஒற்றைக்கல் அரணி வாய்க்காலை அமைதியான முறையில் உபயோகித்து 1 வது அயிட்ட சொத்திற்கு பாசனம் செய்து வருவதை எதிர்மனுதாரர் / 4 ம் பிரதிவாதியோ, அவரது ஆட்கள் வகையறாக்களோ எவ்விதத்திலும் இடையூறு செய்யக்கூடாது என்று இடைக்கால

உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியுள்ளதாகவும், மேற்படி வழக்கில் மனுதாரர் / வாதிக்கு முகநக வழக்கும், மேலீடான வழக்காதாரமும் உள்ளதால் மனுதாரர் / வாதி கோரியுள்ள பரிகாரம் மனுதாரர் / வாதிக்கு கிடைக்கத்தக்கது என்றும், எதிர்மனுதாரர் / 4ம் பிரதிவாதி தரப்பில் பொதுப்பணித்துறை மற்றும் வருவாய் துறையினரை தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்று கூறியுள்ள நிலையில் தாவா 3வது அயிட்ட அரணி வாய்க்கால் தாவா 2வது அயிட்ட சொத்தில் செல்கிறது என்று நீதிமன்ற ஆணையர் தெளிவாக அவரது அறிக்கையில் குறிப்பிட்டுள்ள நிலையில், தாவா 3வது அயிட்ட சொத்தான அரணி வாய்க்காலை மனுதாரர் / வாதி பயன்படுத்துவதை எதிர்மனுதாரர் / 4ம் பிரதிவாதி மட்டும் இடையூறு செய்து வருவதால் அவருக்கு எதிராக பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், பி.ஏ.பி வாய்க்காலானது பொதுப்பணி துறை மற்றும் வருவாய் துறையினரால் பராமரிக்கப்பட்டு வந்தாலும் மேற்படி வாய்க்காலில் இருந்து ஒரு பூமி வழியாக தண்ணீர் பாய்ச்சும் உரிமை தனி ஆவணங்கள் மூலம் ஏற்படுத்தப்பட்டு, மேற்படி உரிமை மறுக்கப்படும் பட்சத்தில் மேற்படி உரிமையைப் பொறுத்து தீர்மானிக்க உரிமையியல் நீதிமன்றத்திற்கு அதிகாரம் உள்ளது என்றும், வருவாய் துறையினரோ, பொதுப்பணி துறையினரோ மனுதாரர் / வாதிக்கு உள்ள பாசன உரிமையை மறுக்காத நிலையில் அவர்கள் வழக்கில் அவசிய தரப்பினர்கள் இல்லை என்றும், எனவே, மனுதாரர் / வாதி கோரியுள்ள இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் மனுதாரர் / வாதிக்கு கிடைக்கத்தக்கது என்று வாதிட்டுள்ளார்.

8) எதிர்மனுதாரர் / 4ம் பிரதிவாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ம.சா.ஆ.2 ம.சா.ஆ.4 மற்றும் ம.சா.ஆ.5 ஆவணங்கள் வழக்கிற்கு தொர்டபில்லாத ஆவணங்கள் என்றும், தாவா 1வது அயிட்ட சொத்து மனுதாரர் / வாதிக்கு பாத்தியப்பட்ட 10 ஏக்கர் சொத்து என்றும், தாவா 2வது அயிட்ட சொத்து எதிர்மனுதாரர் / 4ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட ஒரு ஏக்கர் சொத்து என்றும்,

1964ம் வருடத்திய ம.சா.ஆ.1 கிரைய ஆவணத்தின் அடிப்படையில் பி.ஏ.பி ஒற்றைக்கல் அரணி வாய்க்கால் தாவா 2வது அயிட்ட சொத்தின் வழியாக செல்வதாக மனுதாரர் / வாதியால் கட்சி செய்யப்பட்டு வரும் நிலையில் பொதுப்பணித்துறை மற்றும் வருவாய் துறையினரை வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றும், எனவே, வழக்கானது அவசிய தரப்பினர்களை சேர்க்காத தோசத்தால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், 2020ம் ஆண்டு மார்ச் மாதம் தாவா 2வது அயிட்ட சொத்தில் செல்லும் தாவா 3வது அயிட்ட அரணி வாய்க்காலை சேதப்படுத்தியதாக குறிப்பிட்டுள்ள நிலையில், இதுசம்மந்தமாக காவல் துறையிலோ, வருவாய் துறையிலோ மனுதாரர் / வாதி புகார் அளிக்கவில்லை என்றும், பாசன சபை தலைவரான 7ம் பிரதிவாதியிடம் புகார் அளித்துள்ளதாக கூறியுள்ள போதிலும், மேற்படி புகாரினை விசாரிப்பதற்கு பாசன சபை தலைவருக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றும், எதிர்மனுதாரர் / 4ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எ.ம.சா.ஆ.1 ஆவணத்தில் மாவட்ட ஆட்சியரே பி.ஏ.பி வாய்க்காலை செப்பனிட நடவடிக்கை எடுக்க தகுதியான நபர் என்ற நிலையில், அவரை அசல் வழக்கில் தரப்பினராக சேர்க்காமல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் வழக்கு சட்டப்படி நிலைநிற்கத்தக்கதல்ல என்றும், எனவே, மனுதாரர் / வாதி கோரியுள்ள பரிகாரம் அவருக்கு கிடைக்கத்தக்கதல்ல என்பதால் மனுவினை தள்ளுபடி செய்யவேண்டுமென்று வாதிட்டுள்ளார்.

9) இரு தரப்பு வாதுரையிலிருந்தும் வழக்காவணங்களின் பரிசீலனையில் இருந்தும் அசல் வழக்கானது தாவா 3வது அயிட்ட சொத்தினைப் பொறுத்து விளம்புகை பரிகாரம் கோரியும், தாவா 3வது அயிட்ட சொத்தான ஒற்றைக்கல் அரணி வாய்க்கால் மூலம் தாவா 2வது அயிட்ட சொத்தின் வழியாக தாவா 1வது அயிட்ட மனுதாரர் / வாதிக்கு பாத்தியப்பட்ட பூமிக்கு பாசனம் செய்து வருவதை 4ம் பிரதிவாதியோ அவரது ஆட்கள் வகையறா பேர்களோ எவ்விதத்திலும் இடையூறு செய்யக்கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும்,

தாவா 3 வது அயிட்ட ஒற்றைக்கல் அரணி வாய்க்காலை 4 ம் பிரதிவாதி இடித்து அப்புறப்படுத்திய பகுதியை சீர் அமைத்து தண்ணீர் கொண்டு சென்று பாசனம் செய்யும் வகையில் மாற்றி மீண்டும் கட்டி கொடுக்க 4 ம் பிரதிவாதிக்கு எதிராக செயலுறுத்துக் கட்டளை பரிகாரம் கோரியும் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது.

10) மனுதாரர் / வாதி தரப்பில் தாவா 1 வது அயிட்ட சொத்து ம.சா.ஆ.1 கிரைய ஆவணத்தின் படி சண்முக கவுண்டரிமிருந்து 16.09.1969 ம் தேதியில் மனுதாரர் / வாதியின் தகப்பனாரான தங்கவேல் என்பவரால் கிரையம் பெறப்பட்டுள்ளதாகவும், அதே நாளில் ம.சா.ஆ.2 கிரைய ஆவணத்தின்படி எதிர்மனுதாரர் / 4 ம் பிரதிவாதியின் முன்பாத்தியஸ்தரான ராமலட்சுமி அம்மாள் சண்முக கவுண்டரிடமிருந்து தாவா 2 வது அயிட்ட சொத்தினை கிரையம் பெற்றுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

11) மேற்படி கிரைய ஆவணங்களில் தாவா 2 வது அயிட்ட சொத்தின் வழியாக தாவா 1 வது அயிட்ட சொத்திற்கு அரணி பிடித்து பி.ஏ.பி வாய்க்கால் தண்ணீர் கொண்டு செல்ல பாசன வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளதாகவும், மேற்படி ம.சா.ஆ.1 மற்றும் ம.சா.ஆ.2 கிரைய ஆவணத்தின் அடிப்படையில் பி.ஏ.பி வாய்க்கால் தண்ணீரை தெற்கே இருந்து வடக்கே அரணி பிடித்து தாவா 2 வது அயிட்ட சொத்தின் வழியாக தண்ணீரை கொண்டு சென்று பாய்ச்சி தாவா 1 வது அயிட்ட சொத்தில் மனுதாரர் / வாதி விவசாயம் செய்து அனுபவம் செய்து வந்ததாகவும், அதன் அடிப்படையிலேயே க.ச.501B பூமிகளுக்கு மேற்படி சண்முக கவுண்டர், மனுதாரர் / வாதியின் தகப்பனாரான தங்கவேல் மற்றும் ராமலட்சுமி அம்மாள் ஆகியோர்களுக்கு ம.சா.ஆ.4 கூட்டு பட்டா வழங்கியுள்ளதாகவும், 1964 ம் ஆண்டு முதல் 2020 ம் ஆண்டு வரை எவ்வித பிரச்சனையும் இல்லாமல் மனுதாரர் / வாதி தாவா 2 வது அயிட்ட சொத்தின் வழியாக தாவா 3 வது அயிட்ட அரணி வாய்க்கால் மூலம்

தாவா 1வது அயிட்ட சொத்திற்கு மனுதாரர் / வாதி தண்ணீர் பாசனம் செய்து வந்ததாகவும் கூறப்பட்டுள்ளது.

12) 2வது அயிட்ட சொத்தினை கிரையம் பெற்ற ராமலட்சுமி அம்மாள் இறந்து விட்ட பிறகு அவரது மகளான மாணிக்கத்தாய் என்கிற முருகானந்ததாய்க்கு தாவா 2வது அயிட்ட சொத்து பாத்தியப்பட்டு மேற்படி மாணிக்கத்தாய் என்கிற முருகானந்ததாய் இறந்து விட்ட பிறகு அவருடைய வாரிசுகளான மகன் அமர்பழனிச்சாமி மற்றும் 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டதாகவும், 1ம் பிரதிவாதிக்கு தாவா 2வது அயிட்ட சொத்தில் ஒரு பகுதி பாத்தியப்பட்டுள்ள நிலையில் அதனை அவரது மகளான 2ம் பிரதிவாதிக்கு ம.சா.ஆ.5 தான செட்டில்மெண்ட் ஆவணத்தின் மூலம் பாத்தியப்படுத்திக் கொடுத்துள்ளதாகவும், பின்னர் 2ம் பிரதிவாதி அவரது தகப்பனாரான 3ம் பிரதிவாதிக்கு 09.10.2018ம் தேதியில் ம.சா.ஆ.6 கிரைய ஆவணத்தின் மூலம் பாத்தியப்படுத்திக் கொடுத்துள்ளதாகவும், தாவா 2வது அயிட்ட சொத்தினை 3ம் பிரதிவாதி, 4ம் பிரதிவாதிக்கு 02.11.2018ம் தேதியில் ம.சா.ஆ.7 கிரைய ஆவணத்தின் படி பாத்தியப்படுத்திக் கொடுத்துள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.

13) தாவா 2ம் அயிட்ட சொத்தினை கிரையம் பெற்ற 4ம் பிரதிவாதி 2020ம் ஆண்டு மார்ச் மாதம் தாவா 2வது அயிட்ட சொத்தில் செல்லும் தாவா 3வது அயிட்ட அரணி வாய்க்காலின் பெரும் பகுதியை இயந்திரம் மூலம் இடித்து அப்புறப்படுத்திவிட்டதாகவும், இதுசம்மந்தமாக மனுதாரர் / வாதி, எதிர்மனுதாரர் / 4ம் பிரதிவாதியிடம் கேட்டதற்கு என் பூமிக்குள் நான் என்ன வேண்டுமென்றாலும் செய்வேன் என்றும், இனி பி.ஏ.பி தண்ணீரை எனது பூமி வழியாக உங்களுக்கு பாய்ச்ச விடமாட்டேன் என்று கூறியதாகவும் கூறப்பட்டுள்ளது.

14) எனவே, தாவா 3 வது அயிட்ட அரணி வாய்க்கால் மூலமாக தாவா 2 வது அயிட்ட சொத்தின் வழியாக தாவா 1 வது அயிட்ட சொத்திற்கு மனுதாரர் / வாதி பாசனம் செய்வதை எதிர்மனுதாரர் / 4 ம் பிரதிவாதி இடையூறு செய்து வருவதால் தாவா 3 வது அயிட்ட சொத்தான அரணி வாய்க்காலை பொறுத்து வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

15) எதிர்மனுதாரர் / 4 ம் பிரதிவாதி தரப்பில் தாவா 2 வது அயிட்ட சொத்தின் வழியாக தாவா 3 வது அயிட்ட சொத்தான அரணி வாய்க்கால் மூலம் யாருடைய ஆட்சேபணையும், இடையூறும் இன்றி தாவா 1 வது அயிட்ட சொத்திற்கு மனுதாரர் / வாதி தண்ணீர் பாசனம் செய்து விவசாயம் செய்து வருவதாக கூறியுள்ள பொய்யானது என்றும், தாவா 2 வது அயிட்ட சொத்தில் தாவா 3 வது அயிட்ட சொத்தான அரணி வாய்க்கால் அமைக்கப்படவில்லை என்றும், தாவா 2 வது அயிட்ட சொத்தின் வழியாக எந்த காலத்திலும் அரணி வாய்க்கால் செல்லவில்லை என்றும் கூறப்பட்டுள்ளது.

16) மனுதாரர் / வாதி தரப்பில் பி.ஏ.பி வாய்க்காலில் இருந்து வரும் தண்ணீரை தாவா 2 வது அயிட்ட சொத்தின் வழியாக தாவா 3 வது அயிட்ட சொத்தான அரணி வாய்க்கால் மூலமாக தாவா 1 வது அயிட்ட சொத்திற்கு பாய்த்து பாசனம் செய்து வருவதாக கூறப்பட்டுள்ளது.

17) எதிர்மனுதாரர் / 4 ம் பிரதிவாதி தரப்பில் தாவா 2 வது அயிட்ட சொத்தின் வழியாக மனுதாரர் / வாதிக்கு தண்ணீர் பாசன உரிமையில்லை என்று மறுத்துரைக்கப்பட்டுள்ள நிலையில் ம.சா.ஆ.1 மற்றும் ம.சா.ஆ.2 கிரைய ஆவணங்களை பரிசீலிக்கும் போது, மேற்படி ம.சா.ஆ.1 கிரைய ஆவணத்தில் க.ச.501B நெ காலை பூமியின் வழியாக தெற்கே இருந்து வடக்கே அரணி பிடித்து மனுதாரர் / வாதிக்கு பாத்தியப்பட்ட பூமிகளுக்கு தண்ணீர் பாசன உரிமை சண்முக கவுண்டரால் கொடுக்கப்பட்டுள்ளது என்பதும், அதுபோல் மேற்படி

சண்முக கவுண்டர் அன்றைய தினமே ராமலட்சுமி அம்மாள் என்பவருக்கு கிரையம் செய்து கொடுத்த ம.சா.ஆ.2 கிரைய ஆவணத்தில் நாளது தேதியில் நான் கிரையம் செய்யும் மைனர் தங்கவேல் கார்டியன் தகப்பன் பழனியப்பகவுண்டருக்கு நீங்கள் தெற்கே இருந்து வடக்கே அரணி பிடித்து பி.ஏ.பி வாய்க்கால் தண்ணீர் கொண்டு செல்ல விட்டுவிட வேண்டியது என்றும் குறிப்பிட்டுள்ளதும் தெரிய வருகிறது.

18) மனுதாரர் / வாதிக்கு பாத்தியப்பட்ட சொத்தும், எதிர்மனுதாரர் / 4ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்தும் ஆதியில் உரிமையாளரான சண்முக கவுண்டருக்கு பாத்தியப்பட்டிருந்த நிலையில், மேற்படி சண்முக கவுண்டர் தாவா 1, 2 அயிட்ட சொத்துக்களைப் பொறுத்து ம.சா.ஆ.1 மற்றும் ம.சா.ஆ.2 கிரைய ஆவணங்களின் மூலம் மனுதாரர் / வாதியின் தகப்பனாரான தங்கவேலுக்கும், எதிர்மனுதாரர் / 4ம் பிரதிவாதியின் முன் பாத்தியஸ்தரான ராமலட்சுமி அம்மாளுக்கும் கிரையம் செய்து கொடுத்துள்ள நிலையில், மேற்படி கிரைய ஆவணங்களின் படி தாவா 2வது அயிட்ட சொத்தின் வழியாக அரணி வாய்க்கால் பிடித்து தாவா 1வது அயிட்ட சொத்திற்கு தண்ணீர் பாய்த்து கொள்ளும் வசதி மனுதாரர் / வாதிக்கு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது என்பது தெளிவாக தெரிய வருகிறது.

19) எதிர்மனுதாரர் / 4ம் பிரதிவாதி தரப்பில் தாவா 2வது அயிட்ட சொத்தின் வழியாக தாவா 3வது அயிட்ட பி.ஏ.பி அரணி வாய்க்கால் செல்லவில்லை என்றும், தாவா 2வது அயிட்ட சொத்தின் வழியாக எந்த காலத்திலும் தண்ணீர் கொண்டு செல்லப்பட வில்லை என்றும் தாவா 2வது அயிட்ட சொத்தில் அரணி வாய்க்கால் அமைக்கப்படவில்லை என்றும் மறுத்துரைக்கப்பட்டுள்ளது. இவ்வழக்கில் நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்யப்பட்டு, நீதிமன்ற ஆணையர் தாவா மனுச்சொத்தினைப் பார்வையிட்டு தாக்கல் செய்துள்ள அறிக்கையில் 7வது பத்தியில் " மனு 3வது அயிட்ட

சொத்தானது ஒற்றைக்கல் அரணி வாய்க்கால் என்பது எதிர்மனுதாரர் / 4ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட பூமியின் வழியாக மேல் கோட்டில் தென்வடலாக அமைந்துள்ளது. அதன் அகலம் சுமார் மூன்று அடி அளவில் இருந்தது. மேலும் இந்த ஒற்றைக்கல் அரணி வாய்க்காலனாது தாவா 2வது அயிட்ட சொத்தில் தெற்கிலிருந்து ஆரம்பித்து 4ம் எதிர்மனுதாரரின் பூமிகளில் வடக்கு நோக்கிச் சென்று மனு 1வது அயிட்ட சொத்தை அடைகிறது" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

20) எனவே, தாவா 2வது அயிட்ட சொத்தின் வழியாக தாவா 3வது அயிட்ட சொத்தான அரணி வாய்க்கால் தாவா 1வது அயிட்ட சொத்திற்கு செல்கிறது என்பது நீதிமன்ற ஆணையர் அறிக்கையிலிருந்து தெரிய வரும் நிலையில், மேற்படி தாவா 2வது அயிட்ட சொத்தின் வழியாக அரணி பிடித்து தாவா 1வது அயிட்ட சொத்திற்கு தண்ணீர் பாசன வசதி தாவா சொத்தின் முன்பாத்தியஸ்தரரான சண்முக கவுண்டர் என்பவரால் வழங்கப்பட்டுள்ள நிலையில், தாவா 2வது அயிட்ட சொத்தின் வழியாக தாவா 3வது அயிட்ட அரணி வாய்க்கால் மூலம் தாவா 1வது அயிட்ட சொத்திற்கு தண்ணீர் பாசனம் செய்யும் உரிமை மனுதாரர் / வாதிக்கு உள்ளது என்பதும், தாவா 2வது அயிட்ட சொத்தில் தாவா 3வது அயிட்ட அரணி வாய்க்கால் அமைக்கப்பட்டுள்ளது என்பதும் மனுதாரர் / வாதியால் நிரூபிக்கப்பட்டுள்ளதாக இந்நீதிமன்றம் கருதுகிறது.

21) எதிர்மனுதாரர் / 4ம் பிரதிவாதி தரப்பில் பி.ஏ.பி. வாய்க்காலை பராமரிக்கும் உரிமை மாவட்ட ஆட்சியருக்கு தான் உள்ளது என்று குறிப்பிட்டு Tamilnadu Irrigation Works (Construction of field bothies) Act 1959 ன் பிரிவு 3ன் படி If the Collector is satisfied that it is necessary expedient that any owner should construct or dig field bothies in his land in the ayacut of an irrigation work, he shall by notice require the owner to construct or dig field bothies in that land within such time as may be specified in

the notice and in such manner as may be prescribed. அரணி வாய்க்கால் சட்டம் பிரிவு 7(1), (2)ன் படி 1) No person shall, except in accordance with such rules as may be prescribed, do anything which obstructs or interferes or is likely to obstruct or interfere with the flow of water in any field bothies. 2) If any person contravenes the provisions of sub–section(1), he shall be punishable with imprisonment which may extend to six months or with fine which may extend to one thousand rupees or with both என்று குறிப்பிடப்பட்டுள்ள நிலையில் பொதுப்பணித்துறை மற்றும் வருவாய் துறையை சார்ந்தவர்களை மனுவில் தரப்பினர்களாக சேர்க்காத காரணத்தால் இம்மனுவானது நிலைநிற்கத்தக்கதல்ல என்று கூறப்பட்டுள்ளது.

22) மனுதாரர் / வாதி தாவா 2 வது அயிட்ட சொத்தின் வழியாக தாவா 3 வது அயிட்ட சொத்தான அரணி வாய்க்கால் மூலமாக தண்ணீர் பாசன உரிமை மனுதாரர் / வாதிக்கு உள்ளதை எதிர்மனுதாரர் / 4 ம் பிரதிவாதி இடையூறு செய்து வரும் காரணத்தால் அவருக்கு எதிராக மட்டும் பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், வழக்கில் உள்ள பிரச்சனையானது இரு நபர்களுக்கு இடையே உள்ள தண்ணீர் பாய்ச்சும் உரிமை குறித்த பிரச்சனை என்பதாலும், பொதுப்பணித்துறை மற்றும் வருவாய் துறையினர் தாவா 3 வது அயிட்ட சொத்தின் மீதான மனுதாரர் / வாதியின் உரிமையை இடையூறு செய்யாததால், அவர்கள் வழக்கிற்கு அவசியமற்ற தரப்பினர் என்று கூறப்பட்டுள்ளது.

23) ஒப்புக்கொண்டுள்ளவாறு, பொதுப்பணித்துறை மற்றும் வருவாய் துறையினர் மனுதாரர் / வாதிக்கு தாவா 3 வது அயிட்ட சொத்தில் உள்ள உரிமையை இடையூறு செய்வதாக தெரியவரவில்லை. மேலும், எதிர்மனுதாரர் / 4 ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எ.ம.சா.ஆ.1 ல் குறிப்பிடப்பட்டுள்ள Tamilnadu Irrigation Works (Construction of field bothies) Act 1959 ன் பிரிவு 3 ன் படி பாசன திட்டத்தின் கீழ் தண்ணீர் பாயும் மடைகளில்

ஆயக்கட்டுதாரர்கள் சேதம் ஏற்படுத்தினாலோ, தடைகள் ஏற்படுத்தினாலோ தான் பாசன திட்ட அதிகாரியான மாவட்ட ஆட்சியரிடம் முறையீடு செய்யமுடியும். இவ்வழக்கில் எழுந்துள்ள பிரச்சனையானது பி.ஏ.பி பாசன திட்டத்தின் கீழ் தனி நபர் பூமியின் வழியாக உள்ள தண்ணீர் பாய்ச்சும் உரிமை குறித்த பிரச்சனை என்பதால் உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக வாதி தரப்பில் கூறப்பட்டுள்ளது.

24) ஒப்புக்கொண்டுள்ளவாறு ஒரு பூமிக்கு பாசன திட்டத்தின் கீழ் உள்ள தண்ணீர் பாய்ச்சும் உரிமையானது ஒரு பூமியின் மீதான பொதுவான உரிமை என்பதாலும், இவ்வழக்கில் எழுந்துள்ள பிரச்சனையை விசாரிப்பதற்கு இந்நீதிமன்றத்திற்கு தடையுள்ளதாக தெரிய வராத நிலையிலும், இம்மனுவில் உள்ள பிரச்சனைக்கு தீர்வு காண்பதற்கு பொது பணித்துறையினரும், வருவாய் துறையினரும் அவசியமானவர்கள் என்று தெரிய வராத நிலையில், பொது பணித்துறையினரும், வருவாய் துறையினரும் இம்மனுவிற்கு அவசிய தரப்பினர்கள் இல்லை என்று இந்நீதிமன்றம் கருதுவதாலும், ம.சா.ஆ.1 மற்றும் ம.சா.ஆ.2 கிரைய ஆவணங்களின் மூலம் மனுதாரர் / வாதிக்கு தாவா 2 வது அயிட்ட சொத்தின் வழியாக தாவா 3 வது அயிட்ட சொத்தின் அரணி பிடித்து தண்ணீர் பாசன உரிமையுள்ளதாக தெரிய வரும் நிலையிலும், தாவா 2 வது அயிட்ட சொத்தின் வழியாக 3 வது அயிட்ட அரணி வாய்க்கால் செல்கிறது என்பது நீதிமன்ற ஆணையர் அறிக்கையின் வாயிலாக மனுதாரர் / வாதியால் நிரூபிக்கப்பட்டுள்ள நிலையிலும், மனுதாரர் / வாதிக்கு ஆதரவாக முகநக வழக்கும், மேலீடான வழக்காதாரமும் உள்ளதாக தெரிய வருகிறது.

25) தாவா 3 வது அயிட்ட சொத்தான அரணி வாய்க்காலை தவிர தாவா 1 வது அயிட்ட சொத்திற்கு வேறு எந்த நீர் ஆதாரமும் இல்லை என்று மனுதாரர் / வாதி தரப்பில் கூறியுள்ள நிலையில் மனுதாரர் / வாதி கோரியுள்ள இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரத்தை வழங்காத பட்சத்தில் மனுதாரர் / வாதிக்கு ஈடு

செய்ய இயலா இழப்பு ஏற்படும் என்பதால் மனுதாரர் / வாதி கோரியுள்ள பரிகாரம் மனுதாரர் / வாதிக்கு கிடைக்கத்தக்கது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

26) முடிவாக, இம்மனுவானது செலவுத்தொகையின்றி அனுமதிக்கப்பட்டு, மனுதாரர் / வாதி தாவா 3வது அயிட்ட ஒற்றைக்கல் அரணி வாய்க்காலை அமைதியான முறையில் உபயோகித்து 1வது அயிட்ட பூமிகளுக்கு பாசனம் செய்து வருவதை 4ம் பிரதிவாதியோ, அவரது ஆட்கள் வகையறாக்களோ எவ்விதத்திலும் இடையூறு செய்யக்கூடாது என்று இவ்வழக்கு முடிவடையும் வரையில் இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கி உத்தரவிடப்படுகிறது.

என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் வரிவடிவில் எடுக்கப்பட்டு, பின்னர் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2021ம் ஆண்டு டிசம்பர் மாதம் 09ஆம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ஒப்பம்/–(G.ஆனந்தி)
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி.

**மனுதாரர் / வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள சான்றவாணங்கள் பட்டியல்:**

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.1 | 16.09.1964 | பழனியப்ப கவுண்டர் என்பவருக்கு சண்முககவுண்டர் எழுதிக் கொடுத்த கிரைய பத்திரத்தின் சார்பதிவு நகல் |
| ம.சா.ஆ.2 | 16.09.1964 | A.R.பழனிசாமி கவுண்டர் என்பவருக்கு சண்முக கவுண்டர் எழுதிக் கொடுத்த கிரைய பத்திரத்தின் சார்பதிவு நகல் |
| ம.சா.ஆ.3 | 14.12.1970 | செட்டில்மெண்ட் அலுவலரின் நடவடிக்கை உத்தரவின் நகல் |

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.4 | 25.06.2013 | T.சரவணப்பிரகாஷ் என்பவருக்கு P.தங்கவேல் எழுதிக் கொடுத்த செட்டில்மெண்ட் பத்திரத்தின் நகல் |
| ம.சா.ஆ.5 | 01.08.2018 | ஐஸ்வர்ய வேங்கடராமலட்சுமி என்பவருக்கு கிஷோரி ரதிமாலா எழுதிக் கொடுத்த செட்டில்மெண்ட் பத்திரத்தின் நகல் |
| ம.சா.ஆ.6 | 09.08.2018 | S.K.G.ராமசாமி என்பவருக்கு ஐஸ்வர்ய வேங்கடராமலட்சுமி எழுதிக் கொடுத்த செட்டில்மெண்ட் பத்திரத்தின் நகல் |
| ம.சா.ஆ.7 | 02.11.2018 | லிடியா பிரமிளா வின்சி என்பவருக்கு S.K.G.ராமசாமி எழுதிக் கொடுத்த கிரையப் பத்திரத்தின் நகல் |
| ம.சா.ஆ.8 | 29.05.2020 | T.சரவணபிரகாஷ் என்பவர் உதவி பொறியாளர் பொ.ப.து அவர்களுக்கு அனுப்பிய கடிதம் |
| ம.சா.ஆ.9 | 03.06.2020 | பரம்பிக்குளம் ஆழியார் பாசன திட்ட நீரினை பயன்படுத்துவோர் சங்கத்தின் தலைவர் S.விக்ரம் முத்து ரத்தின சபரி என்பவர் வாதிக்கு அனுப்பிய பதில் கடிதம் |
| ம.சா.ஆ.10 | 03.06.2020 | உதவி பொறியாளர் பொ.ப.து அவர்கள் வாதிக்கு அனுப்பிய பதில் கடிதம் |
| ம.சா.ஆ.11 | 03.06.2020 | உதவிப் பொறியாளர், பொ.ப.து. அவர்கள் வாதிக்கு அனுப்பிய கூட்டு புல வரைபடம் |
| ம.சா.ஆ.12 | – | பரம்பிக்குளம் ஆழியார் பாசன மேன்மைத் திட்டத்தின் பாசன நீர் பங்கீட்டு அட்டை நகல் |
| ம.சா.ஆ.13 | – | பரம்பிக்குளம் ஆழியார் பாசனத் திட்டம், ஆழியார் பாசன படுகை வேட்டைக்காரன்புதூர் கால்வாய் அடங்கி விபரம் |
| ம.சா.ஆ.14 | 27.09.2020 | பட்டா எண்.2379–க்கான கணினி சிட்டா |
| ம.சா.ஆ.15 | 14.12.1970 | செட்டில்மெண்ட் அலுவலரின் நடவடிக்கை உத்தரவின் நகல் |
| ம.சா.ஆ.16 | 26.09.2020 | பட்டா எண்.1028–க்கான கணினி சிட்டா |
| ம.சா.ஆ.17 | 26.09.2020 | பட்டா எண்.2662–க்கான கணினி சிட்டா |
| ம.சா.ஆ.18 | – | மனுச்சொத்தின் வாய்க்கால் அமைப்பை காட்டும் புகைப்படம் ( 4 எண்ணம்) |

**<u>எதிர்மனுதாரர் / 4 ம் பிரதிவாதி தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:</u>**

| | | |
|---|---|---|
| எ.ம.சா.ஆ.1 | – | Tamilnadu Irrigation Works (Construction of field bothies) Act 1959 ன் நகல் |
| எ.ம.சா.ஆ.2 | 22.12.2017 | கோவை மாவட்ட ஆட்சியர் அவர்கள் வழங்கிய உத்தரவின் நகல் |
| எ.ம.சா.ஆ.3 | 07.01.2017 | பொள்ளாச்சி வட்டாச்சியர் அவர்கள் வழங்கிய உத்தரவின் நகல் |
| எ.ம.சா.ஆ.4 | 27.12.2017 | பொள்ளாச்சி வட்டாச்சியர் அவர்கள் வழங்கிய குறிப்பாணை |
| எ.ம.சா.ஆ.5 | – | வாய்க்காலின் அமைப்பை காட்டும் புகைப்படம் (4 எண்ணம்) |

**<u>நீதிமன்ற சான்றாவணங்கள்</u>** :

| | | |
|---|---|---|
| நீம.சா.ஆ.1 | – | இ.ம.எண்.1/2020 மனுவில் நீதிமன்ற ஆணையரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள அறிக்கை மற்றும் புகைப்படங்கள். |
| நீ,ம.சா.ஆ.2 | – | இ.ம.எண்.1/2020 மனுவில் நீதிமன்ற ஆணையரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள வரைபடம் |

ஒப்பம்/–(G.ஆனந்தி)
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி.

---

**அசல் / வரைவு ஆணையுரை**

அ.வ.எண்.294/2020 இல் இ.ம.எண்.1/2020

நாள் : 09.12.2021

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,

பொள்ளாச்சி.

---